9th November 1966]

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஜில்லா அதிகாரிகளுக்கு கொடுக்கப்படக்கூடிய இந்த டைரிகள், ஒரே தரமான அதிகாரிகள், ஒரே சீரான சம்பளம் வாங்குகிறவர்கள், ஒரே தகுதியுள்ள அதிகாரிகள் இப்படிப்பட்டவர்களுக்கு பல்வேறுவிதமான டைரிகள் வழங்கப்பட்டுள்ளனவா ? அதற்குரிய காரணம் என்ன ? அப்படிப்பட்ட குறைபாடு இருக்குமானால் அதை நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : ஜில்லா மட்டத்தில் கலெக்டர்களிடம் இருந்து கோரிக்கை வருகிறது எவ்விதமாக டைரிகள் வேண்டுமென்று. அவர்களுக்கு சப்ளை செய்கிறோம்.

இனவிருத்திக்குச் செம்மறி கிடாக்கள்

* 573 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் 1965-ம் ஆண்டில் இனவிருத்திக்காக எத்தனை செம்மறி கிடாக்கள் விநியோகிக்கப்பட்டன, மாவட்ட வாரியாக ?

(இ) அதற்கான செலவு எவ்வளவு ?

(உ) வடார்க்காடு மாவட்டத்தில் எந்தெந்த பஞ்சாயத்து மூலமாக என்ன விலையில் விற்கப்பட்டன?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) முதல் (உ) வரை இந்த விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்று சபை முன் வைக்கப்பட்டுள்ளது.[a]

Modern Bus stand

* 574 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that the implementation of the proposal to construct a multi-storeyed modern bus stand for mofussil buses is being postponed; and

(*b*) if so, the reasons therefor?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) சென்னை நகரில் வெளியூர் பஸ்களுக்காக நவீன பஸ் நிலையம் ஒன்றைக் கட்டுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

Sri C. CHIRANJEEVULU NAIDU : In view of the difficulty and inconvenience caused to the public, will the Government see that something is done to improve the mofussil bus stand expeditiously?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பல லட்சம் ரூபாய் தேவைப்படுவதால் பரிசீலனைக்கு தாமதமாகிறது.

---

[a] 931—944-ம் பக்கங்களில் பதின்மூன்றாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.